திரு. இ. தீர்த்தகிரி கவுண்டர் : ஏற்கெனவே இது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருந்தும் இப்பொழுது இல்லை என்று சொல்லக் காரணம் என்ன?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இந்த ஆண்டு இதுபற்றிய செயற் குறிப்பு இல்லை இதுபற்றிப் பரிசிலனைக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது இதை ஏற்படுத்த அரசாங்கம் பரிசிலிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : பரிசிலிக்கலாம்.

Marine Diesel Engine Factory at Madras.

*101 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(a) whether the Government has any proposals to start a Marine Diesel Engine Factory in Madras with Japanese collaboration; and

(b) the stage at which the proposals are at present?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இந்திய அரசின் தொழில் நிறுவனமாகிய ஹௌராவிலுள்ள திரு. மத்திய மினளக் கார்ப்பரேஷன், ஜப்பான் நாட்டு ஒசாகாவைச் சார்ந்த திரு. யென்மார் டீசல் என்ஜின் நிறுவனத்தின் உடன் உழைப்புடன் தமிழ் நாட்டிலுள்ள எண்ணூரில், மீன் பிடி படகுகளுக்கான 30-66 குதிரைத் திறனுடைய மரீன் டீசல் பொறிகளை, ஆண்டொன்றுக்கு 1,000 பொறிகள் வீதம் செய்யும் தொழிற்சாலை ஒன்றினை நிறுவ உத்தேசித்துள்ளது.

(இ) இந்த நிறுவனம் தொழில் உரிமம் வேண்டி இந்திய அரசிடம் மனுச் செய்துள்ளது. அது இந்திய அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

DR. H. V. HANDE : When is the factory likely to take a concrete shape? Are the Government aware of the fact that a number of diesel engines which were previously functioning are not functioning now and only those foreign engines fitted to some of the boats are working and otherwise a number of them get stranded? In view of these facts, will the Government let us know when exactly this factory is going to take a concrete shape; and in case there is any delay, will the Government take up the matter with the Central Government and explain to them the urgency for this factory?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தமிழ்நாட்டு அரசின் சார்பில் இது சம்பந்தமாக மத்திய அரசிடம் வற்புறுத்தியிருக்கிறோம். கடைசியாகக் கூட லைசென்ஸ் கொடுக்கலாம் என்பதுபற்றி பரிசீலிக்கும்போது மத்திய அமைச்சர் அங்குள்ள இலாக்காவில் சில புள்ளிவிவரங்கள் வேண்டுமென்று கேட்டு

1969 பிப்ரவரி 28]

இதையும் பரிசிலனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. மீண்டும் இதைப்பற்றி நினைவுபடுத்தி எழுதி இருக்கிறோம்.

திரு. இல. பலராமன் : இதுபோன்ற டீசலில் இயங்கக்கூடிய ஆயில் என்ஜின்கள் விவசாய உற்பத்திக்கு அதிகமாகத் தேவையாக இருப்பதனால், மார்க்கெட்டிலே விற்கக்கூடிய என்ஜின்கள் அதிக விலை விற்பதினால் அரசாங்கம் குறைந்த விலையில் விவசாயிகளுக்கு அவற்றைக் கொடுத்துதவ முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது செய்வதுபற்றிய விவரங்கள்தான் தொழில் அமைச்சரால் கவனிக்கப்படுகின்றன. உறுப்பினர் கேட்கும் விவரம்பற்றி விவசாய அமைச்சரிடம் கேட்டால் பதில் சொல்வார்கள்.

DR. H. V. HANDE : Will the Hon. the Minister be able to tell us the rough estimated cost of this factory and the rough estimated number of persons that this factory is likely to employ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : முதல் முதலாக இங்கே வைக்கப்படுமென்று மத்திய அரசு தெரிவித்து மாநில அரசும் அதை ஒப்புகொண்டு ஜப்பானிய கம்பெனியைச் சேர்ந்தவர்கள் என்னூரில் வந்து பார்த்தார்கள். அதற்குத் தேவைப்படுகின்ற இடம், தண்ணீர் வசதி இவற்றைத் தெரிவித்த பிறகு நம்முடைய அரசு ஒப்புதல் அளித்தது. அவர்கள் மற்ற மாநிலங்களையும் பாத்தார்கள் அதற்குப் பிறகு லைசென்ஸ் கமிட்டியிலே விவாதிக்கப் பட்டு அதற்குப் பின்னால் அவர்கள் முடிவு எடுத்த பிறகு எத்தனை பேர்களை வேலைக்கு எடுத்துக்கொள்ளலாம் என்பதுபற்றி டீடெயில்ட் ப்ராஜெக்ட் ரிப்போர்ட் வந்த பிறகு முடிவு எடுக்கப் படும்.

திரு. இரா. சௌந்தரராஜ மூப்பனார் : இப்போது டீசல் என்ஜின் தொழிற்சாலைகள் எவ்வளவு இருக்கின்றன? சிலர் தரக் குறைவான வார்ப்பு இரும்புகளை உபயோகப்படுத்தி டீசல் என்ஜின்களை உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு விற்பதல்லாமல், கணக்கு விவரங்களையும் காட்டாது இருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதைப்பற்றித் தகவல் இல்லை.

திரு. எஸ். இராமச்சந்திரன் : இந்தியாவிலே இத்தகைய வேறு தொழிற்சாலை செயல்படுகிறது என்ற காரணத்தாலே கடந்த இரண்டு ஆண்டுக் காலமாக அதற்கான அனுமதி தரத் தாமதம் செய்யப்படுகிறது என்று சொல்லப்படுவது உண்மையா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மத்திய அரசிலே லைசென்ஸ் கமிட்டி பரிசிலனை செய்துகொண்டிருக்கிறது. பல இலாக்காக்கள் இதில் பங்கு பெறுகின்றன. நிதி இலாக்கவும் இதைப்பற்றிப் புள்ளி விவரங்கள் சேகரித்துக்கொண்டிருக்கிறது. கனம் உறுப்பினர் அவர்கள் கேட்டமாதிரி வேறு நிறுவனம் இதில் அக்கறைக் காட்ட வில்லை. தமிழ் நாட்டிற்கு அவசியம் வேண்டுமென்று நாம் வற் புறுத்தியுள்ளோம்.

திரு. க. இராமமூர்த்தி : இந்தத் தொழிற்சாலை அமைகிற நிலைமை ஏற்பட்டால் தமிழ்நாடு அரசாங்கத்தைப் பொறுத்த வரையிலே பொதுத்துறையில் நடத்தப்படுமா அல்லது தனியார்த் துறையில் நடத்தப்படுமா என்பதுபற்றி இந்த அரசு முடிவு எடுத் திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : லைசென்ஸ் கமிட்டி இதைப் பற்றி முடிவு எடுத்ததற்குப் பிறகுதான் நாம் பரிசீலிக்க முடியும்.

கைத்தறி நெசவாளர்கள்.

*102 வினா—திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

கடன் தொல்லையில் சிக்கியுள்ள கைத்தறி நெசவாளர்களுக்குக் கைத்தறி நிதி கார்ப்பரேஷனிலிருந்து கடன் கொடுத்து உதவ அரசாங்கம் திட்டமிட்டு இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. சி. கோவிந்தராஜன் : கைத்தறி நெசவாளர்களுடைய வருவாய்க்கு உத்திரவாதம் செய்யக்கூடிய முறையில் புதிதாகத் துவக்கப்படுகின்ற தொழிற்சாலைகளிலே அவர்களுக்கு வேலை கொடுத்து அவர்களுடைய தொல்லைகளை நீக்குவதற்கு அரசாங்கம் வழி செய்யுமா

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது சம்பந்தமாக மெட்ராஸ் ஹான்ட்லூம் பைனான்ஸ் கார்ப்பரேஷன் டெட் ரிலீப் என்ற முறையில் இதில் கவனம் செலுத்துகிறது. அந்த பைனான்ஸ் கார்ப்பரேஷன் இதற்கு உதவி செய்யக்கூடிய முறையில் ஏற்கெனவே ஒரு திட்டம் வைத்திருந்தது. அந்தத் திட்டத்தில் பொருளாதார வசதி இல்லாத காரணத்தினால் இப்போது நிறுத்தப்பட்டிருக்கிறது. கூட்டுறவுத் துறையிலே நெசவாளர்களுக்கு நாம் எந்தெந்த அளவிற்கு உதவி செய்ய முடியுமோ, அந்த அளவிற்குக் கூட்டுறவு சங்கத்தின் மூலமாக உதவி செய்து வருகிறோம்.

திரு. சோ. அழகர்சாமி : கைத்தறி நெசவாளர்களுக்கு இருக்கிற கூட்டுறவு சங்கங்களில் பலவீனமான சங்கங்கள் இருக்கின்றன. அவை பாங்குகளில் கடன் வாங்க முடியாத நிலைமை, ரிசர்வ் பாங்கின் புதிய நிபந்தனையால் கடன் வாங்க முடியாத நிலைமை இருப்பதால் நெசவாளர்களுக்கு வேலை கொடுக்க முடியாத நிலைமை இருக்கிறது. இந்தச் சங்கங்களின் சக்தியைப் பெருக்கிக்கொள்வதற்கு நீண்டகால கடன் கொடுப்பதற்கு சர்க்கார் முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்தச் சங்கங்கள் பலவீனமாக இருப்பதற்குக் காரணம் அவர்கள் வாங்கியுள்ள கடனைக் கொடுக்கமுடியாத நிலைமை இருப்பதால்தான். இன்னும் பல காரணங்கள் இருக்கின்றன. அவர்கள் உற்பத்தி செய்கிற துணி விலை போகாத நிலைமை இருக்கிறது. அந்தச் சரக்குகளை விற்பனை செய்வதற்கு உதவக்கூடிய முறையில் நமது அரசு இடைக்காலக்